விலை ரூபா: 5.00 பக்கங்கள்:- எட்டு **Registered as a News paper in Sri Lanka**


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
# VALAMPURI

திருமணப் பட்டுப்
புடைவைகளின் கைராசியான
ஸ்தாபனம்
ரவி அன் ராஜ்
சில்க்ஸ்

77, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்
T.P:- 021-2469

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 24 வெள்ளிக்கிழமை (07.06.2002) தொலைபேசி 3378 ஒலி 170



நேற்றைய மாணவர் எழுச்சி நிகழ்வுக் காட்சிகள்



படங்கள்:- திருநிபன், துஷ்யந்தன்

# தேர்தல் நடைமுறையில் திருத்தம் செய்யப்படும்!

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(நமது நிருபர்)

**தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறையில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்றுப் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.**

**இத்திருத்தங்கள் யாவும் ஆறு முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும் எனவும் இது தொடர்பாக இம்மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மாற்றங்களின் விபரங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.**

பொதுஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குண்வர்த்தனா பாராளுமன்றத்தில் தனிப்பட்ட முறையில் சமர்ப்பித்திருந்த பிரேரணை ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:-

தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறைகளின்படி விருப்பு வாக்குகளைப் பெறும் வேட்பாளர்கள் மத்தியில் மோதல் சம்பவங்கள் இடம்பெறக்கூடியதாக இருக்கின்றது.

இம் மோதல்களினால் வாக்கு மோசடிகளும் இடம்பெறுகிறது. நாட்டுக்குப் பொருத்தமானதொரு தேர்தல் முறையை நடைமுறைப்படுத்த கட்சித் தலைவர்களிடம் ஆறு வினாக்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவற்றிற்கு அவர்கள் வழங்கும் பதில்களைப் பொறுத்து இந்த

(2ம் பக்கம் பார்க்க)

## மீன்பிடித் தடையை நீக்கக் கோரி

# சிவசிதம்பரம் எம்பியின் பூதவுடல் இன்று யாழ்வரும்

## வவுனியாவிலும் அஞ்சலி

(வவுனியா)

காலஞ்சென்ற மூத்த தமிழ்த்தலைவர் மு. சிவசிதம்பரத்தின் பூதவுடல் கொழும்பில் இருந்து தரைவழிப்பாதையூடாக எடுத்து வரப்பட்டு இன்று காலை 6மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

கொழும்பில் இருந்து எடுத்து வரப்படும் சிவசிதம்பரத்தின் பூதவுடலை ஈரப்பெரிய குளத்தில் வைத்து வவுனியா மாவட்ட கூட்டணியின் பிரமுகர்கள் பொறுப்பேற்று நகரசபை மண்டபத்தில் அஞ்சலிக்காக வைப்பர்.

அமரரின் பூதவுடலுடன் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் யாழ்மாவட்ட எம்பியுமான வி. ஆனந்தசங்கரி எம்பிக்களான ஜோசப் பரராஜசிங்கம்,

( ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதியிலும் சிவாவின் பூதவுடல் அஞ்சலிக்கு

(வவுனியா)

அமரர் மு. சிவசிதம்பரத்தின் பூதவுடல் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும் போது அவரது பூதவுடலை ஓமந்தையில் வைத்து விடுதலைப் புலிகள் பொறுப்பேற்கவுள்ளனர் என்று வவுனியா மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளைச் செயலாளர் எஸ்.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

ஓமந்தையில் வைத்து விடு...

கிளிநொச்சியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சியில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்ற பின்னர் பூதவுடலை விடுதலைப் புலிகள் முகமாலையில் வைத்து தமிழ்க் கூட்டமைப்பின் பிரமுகர்களிடம் கையளிப்பர்.

யாழ்ப்பாணம் எடுத்துவரப்படும் சிவசிதம்பரத்தின் பூதவுடல் ஸ்ரான்லி வீதியில் உள்ள கூட்டமைப்புக் காரியாலயத்தில் மக்களின் இறுதி அஞ்...

இடம்பெறக்கூடியதாக இருக்கின்றது.

கும் பதில்களைப் பொறுத்து இந்த

(2ம் பக்கம் பார்க்க)

லாளர் எஸ்.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

ஓமந்தையில் வைத்து விடுதலைப் புலிகளினால் பொறுப்பேற்கப்படவுள்ள அமரரின் பூதவுடல் வீதியில் உள்ள கூட்டமைப்புக் காரியாலயத்தில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்படும். (வ)

### மீன்பிடித் தடையை நீக்கக் கோரி

# கடற்றொழிலாளர்கள் நேற்று யாழ் செயலகத்தின் முன் மறியல்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் சுதந்திரமாக மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டும்.

கரையோரப் பகுதிகளில் மீனவர்களின் இல்லிடங்களில் தங்கியுள்ள படையினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து நூற்றுக்கணக்கான கடற்றொழிலாளர்கள் நேற்று யாழ் செயலகம் மற்றும் யாழ் பிரதேச செயலகம் ஆகியவற்றின் முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குடாநாட்டில் உள்ள சகல பகுதி மீனவர்களும் தொழிலுக்குச் செல்லாது காலை ஏழு மணியளவிலேயே செயலக வளவில் ஒன்று கூடியதால் செயலகப் பணிகள் மற்றும் பிரதேச செயலகப் பணிகள் யாவும் முற்றாக ஸ்தம்பித்தன.

(2ம் பக்கம் பார்க்க)

## மர்மப்பொருள் வெடித்து சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

மர்மப்பொருள் ஒன்றை தூக்கி வீசியபோது அது வெடித்ததில் சிறுவன் ஒருவன் காலில் காயமடைந்து யாழ் போதனா வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

கரவெட்டி கிழக்கில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் பிரகாஷ் (வயது 13) என்ற சிறுவனே கயாமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (இ-10)

# எக்ஸ்போ விமான சேவை

(யாழ்ப்பாணம்)

எக்ஸ்போ ஏவியேசன் விமான சேவை நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்த விமான சேவையில் பயணம் செய்ய விரும்புபவர்கள் இன்று யாழ் அலுவலகத்தில் பயணச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் பயணச்சீட்டுப் பெற்றவர்கள் நாளை மு.ப 11.30 மணிக்கு பயண

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ் மீனவருக்கு ஆதரவாக நீர்கொழும்பில் மறியற்போர்

(நீர்கொழும்பு)

யாழ் குடாநாட்டு மீனவர்கள் சுதந்திரமாக தொழில் செய்ய அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்று கோரி நேற்று நீர்கொழும்பு பஸ் நிலையத்தில் மறியற்போராட்டம இடம்பெற்றது.

நேற்று மாலை 3மணிக்கு தேசிய கடற்றொழிலாளர் ஒருமைப்பாட்டு அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்ட இம்மறியல் போராட்டத்தில் யாழ் மீனவருக்கு ஆதரவாகவும் அரசுக்கு எதிராகவும் குரல் எழுப்பப்பட்டது.

(இ-6)

# யாழ் குடாவில் மாணவர் எழுச்சிதினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

### நிகழ்வுகளில் பெருந்திரளான மாணவர்கள் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நேற்று யாழ் குடாநாட்டில் மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

மாணவர் சமூகம் தமது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தும தினமாக இந்நிகழ்வு அமைந்ததுடன் மாணவ சக்தியின் ஒற்றுமையையும் வெளிப்படுத்தியது.

யாழ் கல்வி வலயத்தில் யாழ் மத்திய கல்லூரியிலும், வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், தென்மராட்சியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் மற்றும் தென்மராட்சிப் பாடசாலைகளிலும், வலிகாமம் கல்வி வலயத்தில் பாடசாலை ரீதியாகவும் மற்றும் முன்னணிப் பாடசாலைகளான மானிப்பாய் இந்துக் கல்லூரி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, அராலி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும்

தீவக கல்வி வலயத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதுடன் யாழ் பல்கலைக்கழகம், தொழில்நுட்பக்கல்லூரி, கோப்பாய், பலாலி

(2ம் பக்கம் பார்க்க)

# யாழ் பிரதம தபாலகத்தில் நவீன தொடர்பாடல் நிலையம்

### அமைச்சர் இம்தியாஸ் திறந்து வைப்பார்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ள தகவல் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையத்தில், பிரதம தபால் நிலையத்துடன் இணைந்ததான நவீன வசதிகளுடன் கூடிய தொடர்பு நிலையம் ஒன்றை 15ந் திகதி பிற்பகல் 1மணிக்குத் திறந்து வைக்கவுள்ளார்.

இவ் வைபவத்தின் போது யுத்த அனர்த்தங்களினால் சேதமுற்ற உபதபால் நிலையங்களைப் புனரமைப்பதற்கும் பத்து லட்சம் ரூபா பெறுமதியான காசோலை ஒன்றை வடபிராந்திய பிரதித் தபால் அதிபரிடம் அமைச்சர் கையளிப்பதுடன் சுமார் 13 உப தபால்

(2ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தொழில் தேடுகிறார்

சாரதி கனரக வாகன அனுமதிப்பத்திரத்துடன் மும்மொழிகளும் தெரிந்தவர், வயது 57, யாழ் குடாநாட்டில் வேலை தேடுகிறார் தேவைப்படுவோர் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல, 260, மே/பா வலம்புரி, யாழ்ப்பாணம். (5411)

### தவறிவிட்டது

மாணிக்கம் பூபாலசிங்கம் என்பவரது சாரதிக்கான அனுமதிப்பத்திரம் (DL-NO-507791) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மா. பூபாலசிங்கம் ''தாயகம்'' மணற்பகுதி, புத்தூர் எனும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். (5401)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் இளம்பரிதி யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகலவர்த்தக ஸ்தாபனங்களின் உரிமையாளர்களுடனும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். வணிகர்கழகட் பணிமனையில் ஓர் கலந்துரையாடலை நடத்தவுள்ளார்.

இக்கலந்துரையாடலில்சகல வர்த்தக ஸ்தாபனங்களின் உரிமையாளர்களும்தவறாது பங்குபற்ற வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ)

## இராசி பலன்

7-6-2002
வைகாசி 24 வெள்ளி
துவாதசி பி. இ. 3-50 வரை
அச்சுவினி மு. இ, 8-35 வரை
இராகுகாலம் 10-22- 11-52
நல்ல நேரம்; 5-52 - 7-22

**மேடம்**
மனமகிழ்ச்சி, தொழிற்சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, சென்ற இடத்தில் சிறப்பு.

**இடபம்**
முயற்சி கைகூடும், நண்பர்கள் உதவி, கௌரவக் குறைவு, தனவிரயம்.

**மிதுனம்**
அதிகாரிகள் உதவி, குடும்ப சுகம், காரியம் கைகூடும், உடல் வியாதி.

**கடகம்**
காரியத்தடங்கல், தொழில் கஷ்டம், நண்பர்கள் வெறுப்பு, குடும்ப சிந்தை.

**சிங்கம்**
காரிய தாமதம், பொருள் சேர்க்கை, உடல் வியாதி' மனச்சுனம.

**கன்னி**
வியாபார நன்மை, குடும்பக் கவலை, மதிப்புக்குறைவு, நல்ல செய்தி.

**துலாம்**
போசன சுகம், பொருள் விரயம், தூரத்துச் செய்தி, உறவினர் சந்திப்பு.

**விருச்சிகம்**
காரியத் தடங்கல், வாக்கு மேன்மை, இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு.

**தனுசு**
தூரப்பயணம், உறவினர் சந்திப்பு. நண்பர்கள் உதவி, பண விரயம்.

**கும்பம்**
உடல்நலம், போசனசுகம், பெரியோர்கள் ஆதரவு, தெய்வசிந்தை.

**மகரம்**
காரிய அலைச்சல், சென்ற இடத்தில் சிறப்பு. தனலாபம், தொழில் சிறப்பு.

**மீனம்**
தெய்வசிந்தை, வாகன சுகம், இனசனக் கொண்டாட்டம், தூரப்பயணம்,

வளவன்,

# மூத்த தமிழ் அரசியல் தலைவர் சிவாவின் மறைவுக்கு அனுதாபம்

## சுரேஸ் பிரேமச்சந்திரன்

(ஈ. பி. ஆர். எல். எவ் செயலாளர்)

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கும், தமிழ்அரசியல்களத்திலும் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக சேவையாற்றிய மூத்த தமிழ் அரசியல் தலைவர் மு. சிவசிதம்பரம் அவர்களின் மறைவானது தமிழ் மக்களுக்கு பேரிழப்பாகும். தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கு ஆக்கபூர்வமான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இச் சூழ்நிலையில், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை உறுதியாகவும் தெளிவாகவும் பாராளுமன்றத்தில் முன் வைக்கக்கூடிய தலைவர் சிவசிதம்பரத்தின் மறைவானதுதுர் அதிர்ஷ்டவசமானது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சிவசிதம்பரத்தின் மறைவு குறித்து ஈ. பி, ஆர். எல். எவ் செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச் சந்திரன் விடுத்த அனுதாபச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும்,

தமிழ் மக்கள் பிரிந்து நிற்காமல் ஓர் அணியில் திரள வேண்டிய அன்றைய காலத்தின் தேவையை அறிந்து தந்தை செல்வா, அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம், அமரர் தொண்டமான் ஆகியோர் தமிழர் கூட்டணியை உருவாக்கிய போது அதற்கு உறுதுணையாக இருந்தவர்களில் அமரர் மு சிவசிதம்பரமும்ஒருவராவர்.

அதேபோல், தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்று முக்கியமானது என்பதையும், தமிழ் கட்சிகள் ஒரே குரலில் பேச வேண்டும் என்பதையும் சென்னையில் அவருடன் நடத்திய பல சந்திப்புக்களின் போது அவர் என்னிடம் வலியுறுத்தியிருந்தார்.

அவரின் விருப்பம் போலவே இதுவரை காலமும் பிரிந்திருந்த தமிழ் அமைப்புக்கள் ஒன்றாகி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து ஓர் தீர்வை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கும் சூழலில் இவரின் மறைவு தமிழ் மிதவாத அரசியலில் ஓர் வெற்றிடத்தை தோற்றுவித்துள்ளது.

வெறும் பாராளுமன்ற விவாதங்களினூடாக தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையை தீர்த்துவிட முடியாது என்பதையும், இராணுவ அழுத்தங்களே அரசாங்கத்தை சிந்திக்கத் தூண்டும் என்பதையும் ஏற்றுக் கொண்டு அவ்வழுத்தத்தை தமிழீழ விடுதலைப்புலிகளே கொடுக்க முடியும் என்பதையும் உறுதியாக ஏற்றுக் கொண்டவர்.

அன்னாரின் குடும்பத்தாருக்கும் அவர் தலைவராக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் என் சார்பிலும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பிலும், தமிழ் மக்கள் சார்பிலும் எமது ஆழ்ந்த இரங்கலையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்வதுடன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுதியாகவும்இறுக்கமாகவும் தம்மை மாற்றிக் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதே அன்னாருக்கு நாம் செலுத்தும் மிகப்பெரிய அஞ்சலியாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

1950 களில் தனது அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்த சிவசிதம்பரம் அவர்கள் தனது இறுதி மூச்சு வரை தமிழ் மக்களின் விடிவுக்காக அயராது பாடுபட்டார்,

1960 களின் முற்பகுதியில் நடைபெற்ற சத்தியாக்கிரக இயக்கத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸில் அங்கத்துவம் வகித்த அவர் தமிழரசு கட்சியுடன் இணைந்து பங்குபற்றினார். அவர் 60 களில்இலங்கைப் பாராளுமன்றத்தில் உப சபாநாயகராகவும் இருந்திருக்கின்றார்.

1970 களில் இன முரண்பாடு தீவிரமடைந்த போது வடக்கு- கிழக்கில் தனதுகனல்கக்கும்பேச்சுக்களால் மக்களை ஆகர்ஷித்தவர். தமிழர் விடுதலைக்கூட்டணியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக உயர்ந்தவர்.

1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவர் அதிகப்படியான கணிசமான வாக்குகளைப் பெற்று நல்லூர் தொகுதியில் மகத்தானவெற்றியீட்டினார். அவர் நீண்ட காலம் உடுப்பிட்டி தொகுதி பா.உ. ஆகவே இருந்தார்.

சட்டப்புலமை மிக்க அவர் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆழமான உரைகளை ஆற்றியுள்ளார். 1980 களில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் வைக்கப்பட்டிருந்த இளைஞர்களுக்காக வாதாடினார்.

சிம்மக்குரலோன் என அழைக்கப்பட்ட அவர் உயர்ந்த ஆகிருதி கொண்ட ஆணித்தரமான கருத்துக்களை முன்வைக்கும் மனிதராக காணப்பட்டார். அவர் எளிமையும் நற்பண்புகளும் நிறைந்த ஒருஅரசியல் வாதியாவார்.

ஒரு மூத்த தமிழ் அரசியல் தலைவர் ஒருவரின் இறுதியான மரணம் இது என்றுஎண்ணும் போதுவரலாற்றுத் துயரொன்று ஏற்படவே செய்கிறது.

அவருடைய நிலைப்பாடுகள் கருத்துக்களில் எமக்கு தீவிர வேறுபாடுகள் இருப்பினும் அவர் சம காலத்தின் முக்கிய தலைவர் என்பதை மறுப்பதற்கில்லை.

(உ)

## க. சிவத்தம்பி

(பேராசிரியர்)

இலங்கை தமிழர் பிரச்சினை பற்றிய நீண்டகால பரீட்சியம் உள்ள முதுபெரும் அரசியலாளர் மு. சிவசிதம்பரம் அவர்கள் 79ஆவது வயதில் காலமாகியுள்ளார்.

1970-77 இடைப்பட்ட காலத்தில் இலங்கையின் தமிழர் பிரச்சினை தீவிரமாக்கப்பட்ட போது, அதற்கு எதிராக முன் நின்று உழைத்தவர்.

தனக்கென ஆசைகள் இல்லாதவர், பதவிமோகம் எதுவும் இல்லாதவர். இதன் காரணமாக இவர் தன்னுடைய தடயத்தை மிக ஆழமாக பதிக்க விரும்பாதிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உண்மையில் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டதன் காரணமாக தனது பாரிய சொத்துக்கள் முழுவதையும் இழந்தவர்களில் இவரும் ஒருவர். அதனால் இறுதியில் மிக மிக ஓர் சோகமான நிலையிலே இருந்தார்.

இவருடைய அரசியல் கருத்து நிதானம் காரணமாக இவரை மீண்டும் நியமனப்பாராளுமன்ற உறுப்பினராக தமிழ்க் கட்சிகள் அழைத்தனர்.

தமிழர் பிரச்சினைத் தீர்வில் பாராளுமன்ற அரசியலில் இயலாமை என்பதை அறிந்திருந்த இவர் எப்பொழுதும் தமிழ் மக்களின் ஒற்றுமைப்பாட்டிலும், ஒருமைப்பாட்டிலும், பிரச்சினைக்கான தீர்வினைக் காணலாம் என்றார்.

தன்னைப் புண்படுத்தியவர்களைக் கூட புண்படுத்தவிரும்பாதவர் ஆனால், அற்புதமான பேச்சாளர். அவருடைய மறைவு நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கும், அவரின் அரசியல் நேர்மை என்றும் தமிழர் அரசியலில் நிலைத்து நிற்க வேண்டும்என்று வேண்டிக் கொள்கிறேன்.

## அ. விநாயகமூர்த்தி

அகிலஇலங்கைத்தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் எம் பியும்

(யாழ்ப்பாணம்)

தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமானஅமரர் மு.சிவசிதம்பரத்தின் மறைவுக்குஅகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் எம்.பியுமான அ.விநாயகமூர்த்தி அனுதாபம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்றஉறுப்பினருமான கௌரவ முருகேசு சிவசிதம்பரம் அவர்களின் மறைவுகேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

தமிழரைப் பொறுத்தமட்டில் அன்னாரின் மறைவு இந்தநேரத்தில் ஈடுசெய்ய முடியாதது அனுபவம் வாய்ந்த முதுபெரும் தலைவரை நாம் இழந்துநிற்கின்றோம் அவர்அகில இலங்கைத்தமிழ் காங்கிரசின் பொதுக்காரியதரிசியாக செயலாற்றி மாபெரும் தலைவர் ஜீ ஜீ.பொன்னம்பலத்துக்கு பக்கபலமாக இருந்தவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்லபேச்சாளனாக விளங்கியவர் தான்சரிஎன்றுநினைத்ததை அஞ்சாநெஞ்சத்துடன் எந்தஇடத்திலும் சொல்லக்கூடிய வல்லமை படைத்தவராக இருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அன்னாரின்குடும்பத்திற்கும் எனதும் அகிலஇலங்கை தமிழ்க்காங்கிரசினதும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(இ)

## கடற் தொழிலாளர்கள்

வேலைக்காகவந்தபணியாளர்கள் உள்ளேசெல்ல முடியாததால்திரும்பிச் சென்றனர்.

இதுஇவ்வாறிருக்க மறியல் போரில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் கச்சேரிநல்லூர் வீதியில் கச்சேரிவாயில்முன்பாக கயிற்றால் கட்டியும், வாழைக் குற்றிகளைப் போட்டும் அவ் வீதியைத்தடைசெய்தனர்.

இதனால் மேற்படி வீதியால் செல்லமுடியாது மக்கள் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை தமிழ்க்கூட்டமைப்பைச் சேர்ந்த மாவை சேனாதிராஜா, என். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் நேரி சென்று மீனவர்களுடன்கலந்துரையாடினர்.

கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்டப் பிரதிநிதி அறின்ஈஜீனும் அவ்விடத்தில் பிரசன்னமாகியிருந்தார்.

(உ-19-6)

## யாழ் தபாலகத்தில்

திணைக்களங்களுக்கான தொலைபேசி இணைப்பையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார் பி.ப5.30மணிக்கு புதிதாக அமைக்கப்பட்டு வரும் யாழ் பிரதமதபால் நிலையத்தையும் அமைச்சர் பார்வைஇடுவார்.

16ம்திகதி பருத்தித்துறையில் அமைக்கப்பட்டுவரும் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தையும் திறந்து வைப்பதுடன்இரண்டு நாணய தொலைபேசியையும் ஆரம்பித்து வைப்பார். (ம)

## யாழ்குடாவில்

ஆசிரியபயிற்சிக் கலாசாலை மற்றும் யாழ்தேசிய கல்வியற் கல்லூரி ஆகியவற்றிலும் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் மாணவர்சமூகம் தமது எழுச்சியை வெளிப்படுத்தும் வகையில் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.

தேசியக் கொடியேற்றல் அகவணக்கம் ஆகியசம்பிரதாய பூர்வநிகழ்வுகளுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் அரசியல்பிரிவினர் மற்றும் கல்விப்பிரிவினர் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

(இ-23-41-10)

## தேர்தல்நடைமுறை

மாற்றங்கள்புகுத்தப்படும்.

கட்சித் தலைவர்களிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கும் ஆறுவினாக்களையும் சமர்ப்பிக்க இம்மாதம் நடுப்பகுதியில் கட்சித்தலைவர்களின் கூட்டம் கூட்டப்படவுள்ளது என்றுஅமைச்சர் கூறினார்-

இதேவேளை அரசியல் அமைப்புசபையின்கீழ் சுதந்திரஆணைக்குழுக்களை நியமிக்கவும் துரிதநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அது தொடர்பாக இன்றுவிசேட பேச்சுவார்த்தைஒன்றை கட்சித் தலைவர்களுடன் நடத்தவுள்ளதாகவும் அமைச்சர்பீரிஸ் தெரிவித்துள்ளார்.

(வ)

## செற்சரன் குழு யாழ்ப்பாணத்திற்கு இருநாள் விஜயம்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் இருந்து, செடெக் நிறுவனக்கிளை அலுவலக 'செற்சரன்' குழுவினர் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இருநாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இவர்கள் யாழ். குடா நாட்டில் பொதுமக்களை நேரில் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர். (உ-6)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சலன சித்திரம்- யாழ்ப்பாணம் திரைக்கலைச் சங்கத்தின் தென்மராட்சிப் பிரதேசக் கிளையின் பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு மீசாலைச் சந்தியிலுள்ள 'நியூ மற்ஸ்' அக்கடமியில் நடைபெறவுள்ளது.

இவ் அமைப்பில் இணைய விரும்புபவர்களையும், திரைப்படத் தொழில்நுட்பப் பயிற்சி பெற விரும்புபவர்களையும் இன்று சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### அரசும்-விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட

# புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் அரசியல் தீர்வு காணவேண்டும்

## இரா. சம்பந்தன் எம். பி

(நமது நிருபர்)

தமிழ் பேசும் மக்களின் போராட்டம் நியாயமானதொன்று என சர்வதேச சமூகம் மறந்துவிடக்கூடாது. இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் கடந்த காலத்தில் நடந்தவற்றை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று தமிழர் தேசியக் கூட்டமைப்பு திருமலை மாவட்ட எம்.பி இரா. சம்பந்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை முற்றுமுழுதாக அமுல்படுத்த வேண்டும் என்று பாராளுமன்றத்தில் இரா. சம்பந்தன் பிரேரணைஒன்றை சமர்ப்பித்திருந்தார்.

இவ்விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய இரா. சம்பந்தன் எம்.பி மேலும் தெரிவித்திருப்பதாவது;

தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிராக அமெரிக்காவும், இந்தியாவும் ஒரு போதும் செயற்படக் கூடாது அரசு-விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசியல் தீர்வு வரை அரசு முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

தாய்லாந்தில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டதுடன் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் வடக்கு கிழக்குப் புனர்வாழ்வுக்கெனஇப்போதுசெலவிடப்படும் பணம் போதுமானதாக இருக்கவில்லை. இத்தொகை அதிகரிக்கப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற சண்டுத்தாக்குதல் காரணமாக தமிழ் மக்கள் அகாதிகளாக இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் வாழ்கிறார்கள். ஆயிரக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. ஆலயங்கள், கல்வி நிலையங்கள் அழிக்கப்பட்டு விட்டன. கல்வி சீர்குலைந்துள்ளது என்று இரா.சம்பந்தன் எம்.பி கூறினார். (ம)

## பணிநேரம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வாடிக்கையாளர் நலன் கருதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பணிநேரம் நீடிக்கப்பட்டுள்ளது.

காலை 9.00 மணிமுதல் பி.ப. 1.00 மணிவரை இடம்பெற்ற மேற்படிவங்கிச்சேவைகள் தற்போது பி.ப. 3.00 மணிவரை இடம்பெற்று வருகின்றன. (உ-19)

## நடைபாதை வியாபாரத்தில் பாவனைக்கு உதவாத பொருட்களும் விற்பனை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்தில் தற்போது பிரபல்யம் பெற்றுள்ள நடை பாதை வியாபாரத்தில் பாவனைக்கு உதவாத சில பொருட்கள் தென் இலங்கை வியாபாரிகளால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

பென்ரோச் பற்றிகள், மணிக்கூட்டு பற்றிகள் போன்றவற்றை மலிவு விலையில் விற்பனை செய்வதால் பொதுமக்கள்முண்டியடித்துக் கொண்டு வாங்குகின்றனர்.

பென்ரோச் பற்றிகள் ஒரு சோடி 20 ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இவற்றினை வாங்கியவர்கள் வீடுகளுக்குக் கொண்டு சென்று பயன்படுத்த முற்பட்ட சமயம் அவை மின்வலு இன்றி இருக்கக் சாணப்பட்டது.

அதேவேளை, குறித்த பொருளின் பாவனைக் காலம் 2005 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் எனவும் அச்சிடப்பட்டுள்ளது.

அதேபோல பற்றறியில் இயங்கும் மணிக் கூடுகளின் பாவனைக் காலமும் மிகவும் குறுகியதாக இருப்பது பற்றியும் அறியப்பட்டுள்ளது. (உ-77)

## வடமராட்சி கிழக்கில் மருத்துவ வசதியில்லை மரணங்கள் அதிகரிப்பு

(மந்திகை)

வடமராட்சி கிழக்கில் மீளக் குடியமர்ந்த இருவர், மூன்று நாள் காய்ச்சலுக்குப் பலியாகியுள்ளனர்.

மேற்படி பகுதியில், ஏற்ற மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்படாமை காரணமாகவே இவர்கள் மரணமடைந்திருப்பதாக கூறப்படுகிறது.

உடுத்துறையைச் சேர்ந்த க.குமாரையா (வயது 60), வத்திராயனைச் சேர்ந்த செ. பிரியா (வயது 3) ஆகிய இருவருமே காய்ச்சலினால் மரணமடைந்தவர்களாவர். (உ-23

## தண்டப்பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் கசிப்புஉற்பத்தியில் ஈடுபட்ட மூவரிடம்இருந்து 42 ஆயிரம் ரூபாவை யாழ். நீதிமன்றம் தண்டப்பணமாக அறவிட்டுள்ளது.

அச்சுவேலி, யாழ்ப்பாணம், உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த மேற்படி நபர்களிடம் தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன், எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். (உ-10)

## ஆசிரியர் சம்பள நிலுவை இம்மாதம் 15இல் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

வழங்கப்படாதுள்ள, ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளதாக கணக்காளர் இ. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

ஆசிரியர்களின் சம்பள நிலுவைகளில் 40 வீதத்தினை வழங்க கல்வியமைச்சு இணங்கியுள்ளமை தெரிந்ததே. (உ-19)

## விபத்துக்களில் 7 பேர் காயம்

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் இரு தினங்கள் இடம் பெற்ற விபத்துக்களில் 7 பேர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த முதலாம் இரண்டாம் திகதிகளில் இடம் பெற்ற இவ் விபத்துகளில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த சி. இளங்கோ (வயது 26), துன்னாலையைச் சேர்ந்த சி. சிவா (வயது 32), தொண்டைமானாறைச் சேர்ந்த மு. சுதாகரன் (வயது 18), புலோலி மேற்கைச் சேர்ந்த சி. திருச்செல்வம்(வயது51), கரவெட்டியைச் சேர்ந்த த. பிரதீபன் (வயது 21), பொ. இந்திரகுமார் (வயது 27) ஆகியோர் உட்பட 7பேர் காயமடைந்தவர்களாவர். (உ-23)

## சமாதான முயற்சிகளுக்கு ஜேர்மன் அரசு ஆதரவு

(கொழும்பு)

நாட்டில் இனரீதியான நெருக்கடிகள் தொடராவண்ணம் அதை முடிவுகட்டுவதற்காக இலங்கை அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை ஜேர்மன் வரவேற்றுள்ளதாக அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜொஸ் காபிசர் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வரம்புக்குள்ளும், இருதரப்புகளின் ரீதியாகவும், சமாதான முயற்சிகளுக்கு உதவி வழங்கப் போவதாகவும்,

இலங்கையின் பொருளாதாரத்தில் முன்னுரிமை பெறும் துறைகளை மறுசீரமைப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஜேர்மன் சிறந்த பங்களிப்பை வழங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வறுமை ஒழிப்பு, புனர் நிர்மாணம், மீள் குடியேற்றம், மனிதவள அபிவிருத்தி, ஆற்றலைக்கட்டியெழுப்பல என்பன பற்றியும் மற்றும் ஜேர்மன் இலங்கைக்கிடையிலான நீண்டகால நட்புறவு பற்றியும் ஜேர்மன் பாராளுமன்ற வெளியுறவு கொள்கை குழுவின் தலைவரையும் டிரோன் சந்தித்து பேசியுள்ளார். (உ-9)

## 389 செய்தியாளர்கள் 10 வருடங்களில் கொலை

(கொழும்பு)

கடந்த தசாப்தத்தில் உலகளாவியரீதியில் சுமார் 400 செய்தியாளர்கள் கடமையின் போது கொல்லப்பட்டுள்ளனர் என நியூயோர்க்கின்செய்தியாளர்களை பாதுகாக்கும் குழு தெரிவித்துள்ளது.

1992 முதல் 2001 வரையான காலப்பகுதிகளில் 389 செய்தியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் 62 பேர் இராணுவ மோதல்கள், தீவிரவாத நடவடிக்கைகளின் போது இடையில் அகப்பட்டு மரணமானார்கள்.

298 பேர் அவர்கள் எழுதிய செய்திகளிற்காகஎதிர்ப்பாளர்களால் கொல்லப்பட்டுள்ளனர். 1994 இல் ஆகக் கூடுதலாக 66 செய்தியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் றுவாண்டா அல்ஜீரியா, பொஸ்னியா ஆகிய நாடுகளில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## நியாப் திட்டத்திற்கான உலக வங்கிக்குழு 23 இல் யாழ். வரவுள்ளது

(யாழ்ப்பாணம்)

நியாப் திட்டத்திற்கான உலக வங்கிக்குழு இம்மாதம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம்வருகை தரவுள்ளது.

இலங்கைக்கான உலக வங்கியின் பிரதிநிதிகள் அடங்கிய இக் குழுவினர், குடாநாட்டில் நியாப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் மற்றும் புனரமைப்பு செய்யப்படும் குளங்கள், அணைக்கட்டுக்கள் என்பவற்றினைப் பார்வையிடுவர். (உ-10)

## இந்திய-இலங்கை வர்த்தக ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படும்

(கொழும்பு)

இந்திய-இலஙகை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் எதிர்கால நடவடிக்கைகள குறித்து ஆராயப்படவுள்ளது.

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கா இது தொர்டர்பாக ஆராய்வதற்காகநேற்றுமுன்தினம்இந்தியா பயணமானார்.

இருநாள் இந்தியாவில் தங்கியிருக்கும் இவர், இந்திய அதிகாரிகள், வர்த்தகப் பிரமுகர்களுடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இவ் ஒப்பந்தத்தின் அடிப்படையில இலங்கையைவிட இந்தியாவே கூடிய இலாபங்களை அடையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால், இலங்கைக்கு கூடுதலான நன்மைகள் கிடைக்கக் கூடிய வகையில் இவ்வொப்பந்தத்தில் மாற்றங்களை கொண்டுவருவது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும் என தெரிய வருகிறது.

2000 ஆம் ஆண்டு இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின்னர், 5 ஆயிரத்து 300 கோடி ரூபா பெறுமதியான பொருள்களை இந்தியா இலங்கைக்கு ஏற்றுமதி செய்துள்ள போதிலும் 600 கோடி ரூபா பெறுமதியான பொருள்களை மாத்திரமே இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. (உ-8)

### ஒப்பந்தத்தை எதிர்த்து

## தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை நீதிபதிகள் குழு பரிசீலிக்கும்

(கொழும்பு)

பிரதமரினாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனினாலும்கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தினைஎதிர்த்து தாக்கல்செய்யப்பட்ட மனுக்கள் அனைத்தும் மேன்முறையீட்டு நீதிபதிகள் கொண்ட மன்றத்தில் பரிசீலனை செய்யப்படவுள்ளன. மூவர் கொண்ட மேன்முறையீட்டு நீதிபதிகள் இம்மனுக்கள் அனைத்தையும் அடுத்த மாதம் 3 ஆம் திகதிபரிசீலனை செய்யவுள்ளனர்.

மக்கள் விடுதலைமுன்னணி, சிஹல உறுமய, சிங்கள தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்டமேற்படி மனுக்களில் இப்புரிந்துணர்வு ஒப்பந்தமானது அரசியல் யாப்பை மீறுவதால் அதனை தடை செய்ய உத்தரவிடுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## செய்தித் துளிகள்

### பாடசாலை பஸ் சேவை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகளுக்கான வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் திருப்திகரமற்றதாக இருப்பது பற்றி தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கத்தினர் கோண்டாவில் டிப்போ உயர் அதிகாரிகளிடம் அண்மையில் எடுத்துக் கூறியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் வரையிலான பாடசாலை சேவை ஒன்றினை வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஆரம்பித்துள்ளது. (உ-77)

### அ.அட்டைகள் வழங்கல்

(தென்மராட்சி)

அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் பணிபுரியும் கொழும்பு பத்திரிகைகள் மற்றும் ஊடகவியல் துறையின் செய்தியாளர்களுக்கான அடையாள அட்டைகள் இம்மாதம் 15 ஆம் திகதி யாழ். வரும் ஊடகத்துறை அமைச்சரினால் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அடையாள அட்டைகள் வழங்கப்படுவதற்கான விண்ணப்பப்படிவங்களை கொழும்பிலுள்ள தகவல் திணைக்களம் குறித்த செய்தியாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ளது. (உ-77)

### போக் உடைந்து குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

சைக்கிள் 'போக்' உடைந்ததனால் சைக்கிளில் இருந்து முகம் குப்புற நிலத்தில் விழுந்து, நெற்றியிலும், மூக்குப்பகுதியிலும் காயமடைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை பண்ணைப் பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் கண்ணதாசன் (வயது 39) என்பவரே காயமடைந்தவராவார். (த)

### ஹொக்கி சுற்றுப போட்டி

(வல்வெட்டித்துறை)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்படும் விலகல் முறையிலான ஹொக்கி சுற்றுப் போட்டி இன்று யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

பி.ப.3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி,

பி. ப. 4. 30 மணிக்கு கரவெட்டி விளையாட்டு கழக அணி எதிர் உடற்கல்வி விளையாட்டு அணி ஆகியன மோதவுள்ளன. (உ-217)

### இளைஞர்குழு அட்டகாசம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளிப் பகுதியில் பல்வேறு இளைஞர் குழுக்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் பெருகிவருவதால்மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

இளைஞர் கோஷ்டிகள் இரவு வேளைகளில் சந்திகள், ஒழுங்கைகளில் கூடி நின்று பல்வேறு அட்டகாசங்களைப் புரிந்து வருகின்றனர். உ-59))

### நிர்வாகக் கூட்டம்

(தென்மராட்சி)

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் நிர்வாகக் கூட்டம் நாளை சனிக்கிழமை உடுப்பிட்டியிலுள்ள, பத்திரிகையாளர் இ. தயாபரன் இல்லத்தில் நடைபெறும் என செயலாளர் அறிவித்துள்ளார் (உ-77)

### 148 தபால் பொதிகள் எடுத்து வருகை

(யாழ்ப்பாணம்)

நேற்றைய தினம் காங்கேசன்துறை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பலில் குடாநாட்டிற்கான 148 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

அதேசமயம் இங்கு சேகரிக்கப்பட்ட 46தபால்பொதிகள் இக்கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-2)

### நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்தப் பேருரை எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

தாய்மொழிக்கான நியாயம் நேற்று இன்று நாளை என்ற தலைப்பில் பேராதனைப்பல்கலைக்கழக எந்திரவியல் பொறியியல் பீட பேராசிரியர் எஸ். சிவசேகரம் நினைவுப் பேருரையை ஆற்றவுள்ளார். (உ-3)

### செயலமர்வுகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் யாழ். இந்துக் கல்லூரிநிலைய கல்வி டிப்ளோமா, கல்விமாணி செயலமர்வுகள் சனி, ஞாயிறுதினங்களில்நடைபெறமாட்டாதெனவும் பதிலாக எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் நடைபெறுமெனவும்,

குறுங்காலப் பயிற்சி நெறியின் செயலமர்வில் எதுவித மாற்றமும் இல்லையெனவும் சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி த. வில்வநாதன் அறிவித்துள்ளார். (உ)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதியில் உள்ள விறகு காலைகள், அரிவு காலைகள், மரத் தரகர்கள், உரிமையாளர்கள் அனைவருக்குமான கலந்துரையாடல் ஒன்றினை அரசியல் துறை ஏற்பாடு செய்துள்ளது.

தென்மராட்சிப் பகுதிக்கு இன்று பி.ப 3.00 மணிக்கு தென்மராட்சி அரசியல்துறை செயலகத்திலும்,

வடமராட்சிப்பகுதிக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி மு ப.10.00 மணிக்குநெல்லியடி அரசியல்துறை செயலகத்திலும் இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. (உ-3)

### அ. அ. கண்டெடுப்பு

நாவற்குழி கிழக்கு கைதடியைச் சேர்ந்த செல்லன் பாஸ்கரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். (உ-3)

# திட்டவட்டமான கால அவகாசத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்படும்

## ஒப்பந்தம் குறித்த விவாதத்தில் பீரிஸ்

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெறவுள்ள சமாதான பேச்சுக்கள்தாமதமாவதற்கு எவ்வித அரசியல் காரணமும் இல்லையென அரசியலமைப்பு விவகார வியாபார அபிவிருத்தி கைத்தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் மீதான பாராளுமன்ற விவாதத்தில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்உரையாற்றுகையில்;

யுத்தநிறுத்தஉடன்படிக்கை அமுலில் இருக்கும் வேளையில் திட்டவட்டமான கால அவகாசத்தினுள் பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனவும் உறுதியளித்துள்ளார்.

சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படும் என அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ள இவ்வேளையில் மக்களும் மகாநாயக்கர்களும் இதனையே விரும்பி நிற்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## சாவகச்சேரி மக்கள் வங்கி கிளைக்கு தளபாடங்கள் வந்தன

(தென்மராட்சி)

சாவகச்சேரியில் விரைவில் மீள ஆரம்பிக்கப்படவுள்ள மக்கள் வங்கிக்கிளைக்கு கொழும்பில் இருந்து இரு லொறிகளில் புதிய தளபாடங்கள் நேற்றைய தினம் கொண்டுவரப்பட்டுள்ளன.

மக்கள் வங்கியின் வடவலயப் பொது முகாமையாளர் எஸ். இளம்பிறைநாதனின் ஏற்பாட்டில் இத்தளபாடம் இங்கு கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## சமாதான முயற்சிகளை எதிர்த்து கோட்டையில் ஜே.வி.பி ஆர்ப்பாட்டப் பேரணி

(கொழும்பு)

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளைக் கண்டித்தும், பொருட்களின் விலை ஏற்றத்தைக்கண்டித்தும் ஜே. வி. பியினர் நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை புகையிரத முன்றலில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்தொகையான மக்கள் பங்கு பற்றியிருந்தனர். இவ்வார்ப்பாட்ட எதிர்ப்பு ஊர்வலத்தை அடுத்து 12ம் திகதி புதன்கிழமை நுகேகொடயிலும்மாபெரும்ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளனர். (வ)

## வன்னிப் பாடசாலைகளின் நிலையை நேரில் பார்வை

(திருநெல்வேலி)

தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் வடக்கு-கிழக்கு மாகாண உதவிப் பணிப்பாளர் ப. அனந்தராஜ் ஆகியோயார்கடந்த செவ்வாயன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள பாடசாலைகளின் நிலைமைகளை பார்வையிட்டனர்.

உடுத்துறை மகாவித்தியாலயம், மருதங்கேணி இந்து வித்தியாலயம், ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம், செம்பியன்பற்று அ.த.க வித்தியாலயம், மாமுனை அ.த.க. வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளையே இவர்கள் நேரில் பார்வையிட்டுள்ளனர். (த-43)

## 66 ஆயிரம் பேரில் 650 பேர் மட்டுமே நாடு திரும்ப விருப்பம்

(கொழும்பு)

தமிழகத்தில் தஞ்சமடைந்திருக்கும் 66 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளில்சுமார் 650 பேர் மட்டுமேஇலங்கைக்குத் திரும்புவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர்எனதெரியவந்துள்ளது.

சம்மதம் தெரிவித்துள்ளவர்களை இலங்கைக்கு அழைத்து வருவது தொடர்பான அலுவல்களை யு.என்.எச்.சீ.ஆர் நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை இவர்களை தமிழகத்துக்குவெளியே அனுப்புவது தொடர்பானநிர்வாகப் பணிகளில் தமிழக அரசுஈடுபட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-77)

## பேச்சுக்கான அடிப்படை வசதிகள் பூர்த்தி

(கொழும்பு)

தாய்லாந்தில்அரசு-புலிகளுக்கிடையில் நடைபெறவுள்ள நேரடி பேச்சுவார்த்தைக்கான அடிப்படைவசதிகளை சமாதானச் செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

இந்தவகையில், சமாதானச் செயலக அங்கத்தவர்பள்ளியக்கார கடந்த ஒரு மாதகாலமாகத் தாய்லாந்தில் தங்கியிருந்து பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அண்மையில் நாடு திரும்பியுள்ளார்.

அரசு-புலிகள்இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை இம்மாத இறுதியில் அல்லது வரும் மாத ஆரம்பத்தில் தாய்லாந்தில் இடம் பெற விருப்பதாகவும் பள்ளியக்கார தெரிவித்துள்ளார். (உ)

## பல்கலைக்கழகங்களின் நிதி நிர்வாகத்தை கண்காணிக்கக் குழு

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களின் நிதி நிர்வாகத்தைக் கண்காணிக்கக் குழு நியமிக்கப்படவுள்ளது.

நாட்டிலுள்ள 13 பல்கலைக் கழகங்களிலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உபதலைவர் பேராசிரியர் ரத்னாயக்காவின் தலைமையில் இக்கண்காணிப்புக்குழு நிறுவப்படவுள்ளது.

மூன்றாம் நிலைக்கல்வியமைச்சர் இதனைத்தெரிவித்துள்ளார். (உ)

## 11 பாடசாலைகளில் இருந்து படையினர் வெளியேறினர்

(யாழ்ப்பாணம்)

அரசு-புலிகள் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர், யாழ். குடாநாட்டில் உள்ள 11 பாடசாலைகளில் இருந்து படையினர் வெளியேறியுள்ளனர்.

யாழ். வலயத்தில் உள்ள 7 பாடசாலைகளில்இருந்தும், வடமராட்சிவலயத்தில் உள்ள ஒரு பாடசாலையில்இருந்தும், தென்மராட்சி வலயத்தில் உள்ள 3 பாடசாலைகளில் இருந்தும் இவர்கள்வெளியேறியுள்ளனர்.

வலிகாமம், தீவகம் வலயங்களின் பாடசாலைகளில்நிலைகொண்டு படையினர் வெளியேறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், அச்செழு அ. மி. த. க. பாடசாலை, அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம், பூம்புகார் அ. த. க. பாடசாலை. கொழும்புத்துறைதுரையப்பா வித்தியாலயம், அரியாலை கிழக்கு அ. த.க பாடசாலை, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, அல்வாய் கிழக்கு சின்னத்தம்பி வித்தியாலயம், மந்துவில் ஸ்ரீபார்வதி வித்தியாலயம்,ஒட்டுவெளி அ.த.க. பாடசாலை, இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை ஆகியவற்றில் இருந்தே படையினர் வெளியேறியுள்ளனர். (உ-10)

## இன்று ஒரு தகவல்

### வாலிப சன்னியாசி

வாலிப சன்னியாசி ஒருவர் இருந்தார். அவர் மிகவும் சிறு பையனாக இருந்தபோதே சன்னியாச வாழ்க்கையை மேற்கொண்டு உலக மக்களின் தொடர்பிலிருந்து விலகிப் போயிருந்தார். ஆகவே அவருக்கு உலக அனுபவமே மிகக்குறைவாகத்தான் இருந்தது. ஒருமுறை அந்தச் சன்னியாசி பிச்சை எடுப்பதற்காக ஒரு வீட்டிற்குச் சென்றார். ஓர் இளம்பெண் அவருக்குப் பிச்சையளிப்பதற்காக வீட்டின் உள்ளேயிருந்து வெளியே வந்தாள். அவளுடைய ஸ்தானங்களைப் பார்த்த இந்தப் பால சன்னியாசி, அவளுடைய மார்பில் கட்டி ஏதாவது புறப்பட்டிருக்கிறதா? என்று கேட்டார். அப்போது அந்தப் பெண்ணின் தாய் அங்கே வந்து 'குழந்தாய், இல்லையப்பா! அவளுக்கு நீ நினைப்பது போல் கட்டி எதுவும் புறப்படவில்லை. கூடியவிரைவில் அவளுக்குக் குழந்தை பிறக்கப் போகிறது. அந்தக் குழந்தைக்குப் பால் கொடுப்பதற்காக இறைவன் முன்கூட்டியே இந்த இரண்டு ஸ்தானங்களைப் படைத்திருக்கிறான். குழந்தை பிறந்ததும் அந்த ஸ்தானங்களிலிருந்து பால் குடிக்கும்' என்றுபதில் சொன்னாள்.

இந்தப் பதிலை அந்த இளம் சன்னியாசி கேட்டாரோ இல்லையோ, உடனே அவர் 'நான் இனிமேல் பிச்சைக்காகப் போகமாட்டேன், என்னை யார் படைத்தாரோ அந்த இறைவனே என்உணவு விவகாரங்களையும் கவனித்துக் கொள்வார்' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டார். ஸ்ரீ ராம கிருஷ்ணர் அருளியுள்ள இந்தக் கதை ஒப்பற்ற ஓர் உண்மையை எளிய முறையில் விளக்கிக் காட்டுகிறது.

உலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும் தந்தையாக இருப்பவர் கடவுள். அவரே எல்லா உயிர்களையும் பரிபாலிக்கிறார். காத்து இரட்சிக்கிறார். இந்த உண்மை தூய உள்ளங்களில் பசுமரத்தாணி போல எளிதாகச் சென்று பாய்ந்து தங்குகிறது. கேட்ட உண்மைகளை அப்படியே அவர்கள் கிரகித்துக் கொள்ளவும், வாழ்க்கையில் உடனே கடைப்பிடிக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

கடவுள் ஒருவர்தாம் கர்த்தா. உன்னைக் காத்து இரட்சிக்கும் பொறுப்பையும் அவர்தான் கவனித்துக் கொண்டிருக்கிறார். ஆகவே அஞ்ஞானத்தினால் பைத்தியக்காரத் தனமாக, 'நாளைக்கு இதைச் செய்வேன், அதைச் செய்வேன்' என்று இலௌகிக எண்ணங்களுடன் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்காதே. நீ கடவுளுடைய பொறுப்பில் இருக்கிறாய் என்பதை உணர்ந்து முற்றிலும் அவரிடமே உன்னை ஒப்படைத்து விடு. சதா சர்வகாலமும் கடவுளின் நினைவிலே உன்னை வைத்துக் கொள். உன் உலக விவகாரங்கள் என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்றெல்லாம் நீ அச்சம் கொள்ளவேண்டிய அவசியமே இல்லை. நீ உன்னை உண்மையிலேயே கடவுளிடம் ஒப்படைத்துவிட்டால், உனக்கு எதை, எப்போது செய்யவேண்டும் என்பதை அவரே பொறுப்பேற்றுக் கவனித்துக் கொள்வார். கடவுள் இராஜ்யம் தான் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, தலைக்கு மிஞ்சிய ஆபத்து ஒன்றுமே உனக்கு ஏற்பட வழியில்லை. ●

நன்றி
ஸ்ரீ ராம கிருஷ்ணர் சொன்ன கதைகள்.

# பெண்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## கியுடெக் இயக்குநர் தெரிவிப்பு

(ஈச்சமோட்டை)

சமூகத்தில்இன்று பெண்கள் அதிகமான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

இவற்றைத் தீர்க்க நாமனைவரும்ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்.

அண்மையில் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெற்ற ''வாழும் உரிமையை உறுதிப்படுத்துவோம்'' எனும் கருத்தரங்கில் சிறப்புரையாற்றிய மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட் தந்தை சி. ஜி. ஜெயக்குமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சமூகத்திலுள்ளஅனைத்து அங்கத்தவர்களும் அடிப்படை உரிமை மீறல்களால் பாதிக்கப்படுகின்ற போதிலும் விதவைகளும், இளம் பெண்களும் இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

தற்போது யாழ்.குடாநாட்டின் 13 உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் 21 ஆயிரத்து 600 விதவைகள் உள்ளனர். இவர்களில் 40 வீதமானோர் 40 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

இவர்கள்சமூகத்தாக்கங்களின் தவறானபார்வை அணுகுமுறைகள்என்பவற்றால்பாதிக்கப்படுவதுடன் இளம் பெண்கள்பாலியல் பலாத்காரம், சேட்டை என்பன வற்றால் பாதிக்கப்படுகின்றனர்.

எமது சமூகத்தின் சுபீட்சமானவாழ்வுக்காகநாம் அனைவரும் ஒன்றிணைந்தே இவ்வாறான பிரச்சினைகளை தீர்க்க முன்வர வேண்டும்என்றார். (உ-59)

### கல்விப் பணிமனை சாவகச்சேரியில் இயங்குகிறது

(தென்மராட்சி)

கடந்த இரு வருடங்களாக நெல்லியடி மகாவித்தியாலயத்தில் இயங்கி வந்த தென்மராட்சி வலய கல்விப் பணிமனை நேற்று முன்தினம் முதல் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள தனியார் இல்லத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. (உ-77)

### மன்னார் அணி வென்றது

(யாழ்ப்பாணம்)

மன்னார் அணிக்கும், ஊரெழு றோயல் அணிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி கடந்த சனியன்று ஸ்கந்தவரோதயாகல்லூரி மைதானத்தில் இடம் பெற்றபோது,

ஒன்றரை மணிநேரம்இடம் பெற்ற இவ் ஆட்டத்தில் மன்னார் அணி றோயல்அணியை 110 என்ற கோல் கணக்கில் வென்றது.

பிரதம மத்தியஸ்தராக ரி. கருணாகரன்,உதவி மத்தியஸ்தராக பிரான்சிஸ் ஆகியோர் கடமையாற்றினர். (உ-2)

### பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை அருள்மிகு சித்தியம்பதி அண்ணமார் தேவஸ்தான வருடாந்த வைகாசி பொங்கல் விழா கடந்த 31 ஆம் திகதி விளக்கு வைப்பு பூசையுடன் ஆரம்பமாகியுள்ளது.

இன்று இரவு திருக்கதவு திறப்பு பூசையும் நாளை அதிகாலை 5.00 மணிக்கு அபிஷேகப் பூசை, வளர்ந்துப் பானைப் பூசை, பொங்கல், மடை என்பனவும் இடம்பெறவுள்ளன. (உ-3)

### மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு ஞானவைரவர் ஆலய புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது. (உ-8)

## மங்கள விரைவில் விசாரிக்கப்படுவார்

(கொழும்பு)

முன்னாள் பிரதி அமைச்சர் சாகரத்னாயக்காவின் ஆதரவாளர்களைத் தாக்கியது தொடர்பான குற்றச்சாட்டில் முன்னாள் வீடமைப்பு பொது நலன்புரி அமைச்சர் மங்கள சமரவீர குற்றப் புலனாய்வு பொலிஸாரால் விசாரணை செய்யப்படவுள்ளார்.

அக்குரைசையில் நடைபெற்ற மேற்படி இச்சம்பவத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் பலர் காயமடைந்துள்ளனர்.

இதுதொடர்பான விசாரணைகளின் போது அமைச்சர் மங்கள சமரவீரவின் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் 8பேர் குற்றப்புலனாய்வு பொலிஸ் திணைக்களத்தினால் முன்னர் விசாரணை செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## சிங்கப்பூருக்கு இணையாக இலங்கை வளர்ச்சியுறும்

### அமெரிக்கத்தூதர் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையில் சமாதானம் நிலை நாட்டப்பட்டுவிட்டால் அதுஒருகணப்பொழுதில்தெற்காசியாவின்சிங்கப்பூராகமாறிவிடும் என்றுகொழும்பிற்கான அமெரிக்க தூதுவர் அஸ்லி வில்ஸ் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் கல்விமான்கள், இராஜதந்திரிகள், செய்தியாளர்கள மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அமைவிடம், அந்நாட்டின் பிரஜைகளினது திறமை, தத்துவநோக்கிலான பார்வை என்பன காரணமாக சுபீட்சமடைந்து சிங்கப்பூராக மாறக்கூடிய வல்லமை இலங்கைக்கு உண்டு.

இதைவேளை, அறிமுகமாகி வரும் உயர் தொழில் நுட்பத் துறைகள், கப்பல், விவசாய உற்பத்திதுறைகளில் இலங்கை முன்னேற்றமடையக் கூடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## சிவாவின் மறைவுக்கு தந்தை செல்வநாயகம் அறங்காவல்குழுஅனுதாபம்

(தென்மராட்சி)

முதுபெரும் அரசியல்வாதியும் தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவின் உபதலைவர்களில் ஒருவருமான மு.சிவசிதம்பரம் பா. உறுப்பினரின் மறைவு குறித்துதந்தை செல்வா நினைவு அறங்காவல் குழு தனது ஆழ்ந்த அஞ்சலியையும் அனுதாபத்தையும் தெரிவித்துள்ளது.

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவின் வளர்ச்சிக்கு அமரர் மு. சிவசிதம்பரம் ஆரம்பகாலம் தொட்டு காத்திரமான பங்களிப்பினை வழங்கிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-77)

## வன்முறையை தூண்டுவது பொ. ஐ. முன்னணியே

### உள்துறை அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐ. தே. முன்னணி அரசாங்கம ஆட்சி அமைத்த பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது பொ. ஐ. முன்னணி மற்றும் மக்கள விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்களே வன்முறைகளை ஆரப்பித்துள்ளமைக்கான ஆதாரங்கள் உள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கபாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த உள்ளூராட்சி தேர்தலின் போது 6 பேர் உயிரிழந்ததாகவும்இவர்கள் அனைவரும் ஐ. தே. கட்சி ஆதரவாளர்கள் எனவும்கூறினார்.

இதேவேளை தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளில் 148 சம்பவங்கள்அரசியல் தொடர்பற்ற சம்பவங்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## இலங்கை- அமெரிக்க

# பாதுகாப்பு ஒப்பந்த நகல் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கைச்சாத்திடப்படவுள்ள, பாதுகாப்பு ஒப்பந்த நகல் அதன் சட்டபூர்வ தன்மைபற்றி ஆராயும் வகையில் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்தில் அமெரிக்கப்படைகளுக்கு எவ்வாறு குறைந்த விலையில் ஆயுதங்கள்வழங்கப்படுகின்றனவோ, அதே விலையில் இலங்கைப் படைக்கும் லாபமின்றி வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பில் அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவும் அமெரிக்காவின் சார்பில் ஆஸ்லிவில்ஸும் இவ்வாரம் கைச்சாத்திடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது,

இதன் சட்டபூர்வ தன்மை பற்றி விரைவில் சட்டமா அதிபர் அறிவிப்பார். (உ-3)

## இலங்கை வங்கியின் மேற்தரக் கிளைப்பிரிவுகள் தற்காலிக இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி மேற்தரக் கிளையில் கணனிமயமாக்கும் நடவடிக்கைகளும் திருத்த வேலைகளும் நடைபெறுவதால் நடைமுறைக் கணக்குப் பிரிவு,நிரந்தர வைப்புப்பிரிவு, பணமாற்றல், வரவு, காசுப் பிரிவு என்பன தற்காலிகமாக யாழ். மாவட்ட காரியாலயக் கட்டடத்தின் மேற்குப் புறத்தில் இயங்கி வருவதாகவும்,

சேமிப்புக் கணக்கு வங்கியின் மேல்மாடியில் இயங்கி வருவதாகவும் வங்கி முகாமையாளர் எஸ். விக்னராஜா வாடிக்கையாளர்க்கு அறிவித்துள்ளார். (உ-8)

## சிந்தனைக்கு விருந்து

### மூன்று புதிய சிறைச் சாலைகள்!

நாளுக்கு நாளிந்த நாட்டிலே ஒழுக்கநெறி
நலிந்துமே வீழ்ச்சி காணல்
ஆளுக்காள் பேசிமனப் புழுக்கமிகக் கொள்வதால்
ஆவதோர் பயனும் இல்லை
நீளுகிற குற்றச் செயல்களின் எண்ணிகை
நினைக்கொணாத் தொகைய தாகும்
மூளுமிந் நெருக்கடித் தீர்வுயா தென்றிடில்
மூன்றுசிறை புதிய கட்டல்!

-பழையவன்

# எல்லை ஊடுருவலைக் கண்காணிக்க சர்வதேச மேற்பார்வையாளர்கள்

## முஷாரப்பின் இந்த யோசனையை வாஜ்பாய் நிராகரிப்பு

(புதுடில்லி)

எல்லையில் ஊடுருவல் நடப்பதைக் கண்காணிக்க சர்வதேச பார்வையாளர்களை நியமிக்கலாமென்ற பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பின் யோசனையை இந்தியப்பிரதமர் வாஜ்பாய் நிராகரித்துள்ளார்.

கஜகஸ்தான் அல்மாட்டியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் எல்லையில் ஊடுருவலைக் கண்காணிக்க இரு நாடுகளும் கூட்டுப்படை அமைத்து கண்காணிப்பதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ளலாமென்று தெரிவித்தார்.

மேலும் தாம் பாகிஸ்தானுடன் பேச்சுக்களை நடாத்தத்தயாரென்றும், இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குள் எந்த ஊடுருவலும் இல்லையென்று திட்டவட்டமாய் கூறினார்.

பண்பட்டசமுதாயத்தில்தீவிரவாதத்திற்குஇடமேஇல்லை: எனவே தான் உலகசமுதாயமே தீவிரவாதத்தையும் பயங்கரவாதிகளையும் ஒடுக்க இந்தியாவுடன் ஒன்றுபட்டு செயற்படுகின்றது என்றும் தெரிவித்தார். (உ-4)

# அரபாத்தின் அலுவலகத்தினுள் இஸ்ரேலியப் படைகள் புகுந்தன

(ஜெருசலேம்)

மேற்குக் கரையிலுள்ள றமழாநகரில் பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தின் தலைமை அலுவலகத்தின் தரைத் தளத்தினுள் நேற்று இஸ்ரேலியப் படைகள் புகுந்தமையால் தீவிர சண்டைகள் நடைபெற்றுள்ளன.

இச் சம்பவத்தில் ஒரு பலஸ்தீனர் கொல்லப்பட்டதுடன், வளாகத்தைச் சுற்றியுள்ள பல கட்டடங்கள் சேதமடைந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 50 கவச வாகனங்கள் அரபாத்தின் அலுவலகத்தை சூழ்ந்துகொண்டதும், இப்படைகள் அலுவலகத்துள் எதிர்பாராத வகையில் புகுந்தபோது அரபாத் அலுவலகத்துள் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-4)

## எல்லைத் தாக்குதலுக்கு மியன்மார் தயார்

(பாங்ஹொங்)

தாய்லாந்தின் எல்லைப் பிரதேசத்திலுள்ள 4 இராணுவ முகாம்களைகைப்பற்றுவதற்கு மியான்மாரின் இராணுவத்தினர் தயாராகி வருகின்றனர்.

இனக்குழுவானஷாம்கிளர்ச்சியாளர்களினால் கடந்த மாதத்தில் இவ் நான்கு இராணுவமுகாம்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான விடயத்தில் பாங்கொங் தலையிடக் கூடாது என மியான்மார் அரசு எச்சரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது.

அத்துடன் தாய்லாந்துஇராணுவம ஷாம் கிளர்ச்சியாளர்களை ஆதரித்துவருவதாகவும்அந்நாட்டரசு குற்றம் சாட்டியுள்ளது.

இதனைமறுத்த தாய்லாந்து மியான்மாரில் இருந்து வீசப்பட்டமோட்டார் குண்டுகள் தாய்லாந்தில் வீழ்ந்ததால் தமதுபடையினர் எல்லைக்கப்பால்செல்தாக்குதலை நடத்தியதாகவும் தெரிவித்துள்ளது. (உ-8)

## 46 பேர் உயிரிழப்பு

(புதுடில்லி)

உத்தரப் பிரதேசத்தின் ஜெக்கா மாவட்டத்தில்கடுகதி புகையிரதமும் தனியார் பேருந்தொன்றும் மோதிக் கொண்டதில் 46 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த செவ்வாயன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (உ-4)

## 19 பேர் பலி

(புதுடில்லி)

மும்பை-கோவா நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்தில் 8 பெண்கள் மற்றும்3 சிறுமியர் உட்பட 19பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் விபத்தில்45 பேர் காயமடைந்துள்ளனர்.இவர்களில் 9 பேரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளது. (உ-4)

## காஷ்மீர் தாக்குதலில் 9 தீவிரவாதிகள் பலி

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பள்ளத்தாக்கில் தீவிரவாத அமைப்புக்களைச் சார்ந்த மூன்று பயங்கரவாதிகளை இராணுவம் நேற்று முன்தினம் சுட்டுக்கொன்றுள்ளது.

பெருமளவிலான ஆயுதங்களும், வெடிப்பொருட்களும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

இதைத்தவிர, நேற்று முன்தினம்இடம்பெற்றஇன்னொரு சம்பவத்தில்பூந்மாவட்டத்தில் இராணுவமும் பொலிஸாரும் கூட்டாக மேற்கொண்ட நடவடிக்கையில் லக்ஸறி இதொய்பா பயங்கரவாதிகள் 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தப் பயங்கரவாதிகள் அனைவரும் வெளிநாட்டவர்கள் என்று கருதப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (உ-4)

## இஸ்ரேலில் 10 பேர் உயிரிழப்பு

(ரெல்அவீவ்)

இஸ்ரேலில் கசியான் நகரில் நேற்றுமுன்தினம்கார்க்குண்டு வெடித்ததில் 10 பேர் கொல்லப்பட்டனர் 20 க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

பஸ்சுக்குள் பயணிகள் ஏறிக் கொண்டிருக்கும் பொழுது, அருகிலிருந்த காரில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததாக தெரியவருகின்றது.

இது தீவிரவாதிகளின் செயலாகவே இருக்குமென்று தகவல் அறிந்த வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. (உ-4)

## கார்க்குண்டு வெடிப்பில் 18 இஸ்ரேலியர் பலி

(இஸ்லாமாபாத்)

இஸ்ரேலின் ஹைப்பா நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில்18 இஸ்ரேலியர்கள்கொல்லப்பட்டுள்ளதுடன் 36 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலுக்கு ஜிகாத் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

அமெரிக்க உளவுத்துறைஸ்தாபனத்தின்இயக்குநர் ஜோர்ஜ்ஸ்ரனட் இப்பகுதியில் இருந்தபோது இத்தாக்குதல் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேலிய ஹெலிக்ஹொப்டர்கள்மேற்குக்கரைப்பகுதியில் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளன. (உ-4)

## 11 தீவிரவாதிகள் பொலிஸில் சரண்

(இஸ்லாமபாத்)

ஜம்முகாஷ்மீரின்குர்ஜ்சாரா மாவட்டத்தில் மேலும்11 தீவிரவாதிகள் சிவில் அதிகாரிகளிடம் நேற்று முன்தினம் சரணடைந்துள்ளனர்.

கடந்த மாதம் தொடக்கம் இதுவரை 34பயங்கரவாதிகள் பொலிஸாரிடம் சரணடைந்திருப்பதாகவும் இவர்களில் பலர் பாகிஸ்தான் ஆதரவிலான கிஸ்புல் முஜாகுதீன் அமைப்பைச் சேர்ந்தவர்களென்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றுமுன்தினம் சரணடைந்த பயங்கரவாதிகள் பெருந்தொகையான ஆயுதங்களையும் வெடிப்பொருட்களையும் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (உ-4)

## தபால் கடை திறப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் 15 ஆம் திகதி தபால் கடை ஒன்று யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ளது. இத் தபால் கடையில் கவரிடுதல், போட்டோபிரதி, மின்னஞ்சல்,மீற்றர் தொலைபேசி போன்ற தபால் அலுவலகத்துடன் தொடர்புடைய பொருட்களே இங்கு விற்பனை செய்யப்படும்.

இக் கடையினை ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பக்கீர் மாக்கர் திறந்து வைப்பார். (உ-2)

## மீனவர்கள் முறைப்பாடு செய்ய தனியான பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். கண்காணிப்புக்குழு அலுவலகத்தில், மீனவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கென தனியான பிரிவு இயங்கவுள்ளது.

இம்மாதம் 15ஆம் திகதி முதல் மேற்படி பிரிவில் மீனவர்கள் தமது முறைப்பாடுகளைச் செய்ய முடியும். (உ-2)

## பொருளாதார வளர்ச்சிக்கு உரிய சீர்திருத்தங்களை அரசு முன்வைத்துள்ளது

(கொழும்பு)

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திய பின்னர் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு உரிய சீர்திருத்தங்களை அரசு முன் வைத்திருக்கிறது என ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் ஜோன் கூனே தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மன்றக் கூட்டத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு பெரும் சக்தியாக தனியார் துறை விளங்க வேண்டும் என்ற அரசின் கருத்தை பாராட்டியுள்ள ஜோன் கூனே,

பொருளாதாரத்தில் புதிய சட்டமைப்பு முறையில் தனியாரின் முதலீட்டை ஊக்குவிப்பதற்கு தேவைப்படும் சகல உதவிகளையும் மேற்கொள்வது அரசின் பொறுப்பாகும் என்றும் தெரிவித்துள்ளார். (உ-9)

## தென்னிலங்கைபோ.வ.சபை உதைபந்தாட்ட அணி நல்லெண்ண விஜயம்

(சுண்டுக்குளி)

தென்னிலங்கைப் போக்குவரத்துச் சபையின் உதைபந்தாட்ட அணி நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இவ் அணியில் தேசிய அணி வீரர்கள் ஐவர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களுடன் போக்குவரத்துச் சபையின் உயர் மட்ட அதிகாரிகள் சிலரும் வருகை தந்துள்ளனர்.

இன்று பி. ப. 5.00 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியுடனும்,

நாளை பி. ப 4. 30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் பருத்தித்துறை லீக் தெரிவு அணியுடனும்,

9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 5 மணிக்கு யாழ். உதைபந்தாட்ட லீக் அணியுடன் யாழ். பல்கலைக் கழக மைதானத்திலும் மேற்படி அணி மோதவுள்ளது. (உ-110)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையின் மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 1.30 மணிக்கு அதிபர் ந. சிவகடாட்சம் தலைமையில்இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ. சிவராசாவும் சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன், ஓய்வு பெற்ற அதிபர் கா. கணேசதாசன், உடற்கல்விப் பணிப்பாளர் வி. பாலசிங்கம், தெல்லிப்பளைக் கோட்ட முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எ. வி. கணேசலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)

## நிகழ்கால அரசியல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிகழ்கால அரசியல் கருத்தரங்கு கடந்த திங்கட்கிழமைசுன்னாகம் மயிலணியில் ம. சத்தியபாலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆசியுரையை ச. வரதராஜேஸ்வர சர்மா நிகழ்த்தினார்.

கிராம உத்தியோகத்தர் பாலபத்மன், விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் புதுவை அன்பன், தமிழ் மறவன், யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோரும்உரையாற்றினர்.

சமாதானத்திற்கான கலை கலாசார பிரிவின் புதுவை அன்பனின் தயாரிப்பில் உருவான 'கரைதேடும் ஓடங்கள்' நாடகமும் இடம்பெற்றது. (உ-3)

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக நலன்புரிக் கழகம் மற்றும் அரச திணைக்களங்கள், யாழ் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன இணைந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளன.

எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் க. சண்முகநாதனும்,

சிறப்பு விருந்தினர்களாக கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் பொ. கமலநாதன், மோட்டார் போக்குவரத்துப் பிரிவு உதவி ஆணையாளர் வ. பத்மநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-6)

## கருத்துப் பரிமாற்றம்

(யாழ்ப்பாணம்)

விவசாயம், மீன்பிடி, மற்றும் மீள்குடியமர்தல் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் சம்பந்தமாக முக்கிய பிரமுகர்களுடன் கலந்துரையாடி ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதால் யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின், பிரதிநிதிகள் மற்றும் அரசசார்பற்ற,சமய, சமூக, தொழிற்சங்க நிறுவன அங்கத்தவர்கள் அனைவரையும் இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 3. 00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி கேட்போர் கூடத்திற்கு வருகைதந்து தத்தமதுகருத்துக்களைமுன்வைக்குமாறு யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் அ. கி. சிவசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (உ)

தோன்றின் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை
நன்று
குறள்

# வலம்புரி

## சிவாவின் இழப்பு

தமிழர் விடுதலைக்கூட்டணியின் மூத்த தலைவர் சிவசிதம்பரத்தின்மறைவு தமிழினத்திற்குப் பேரிழப்பாகும் தந்தை செல்வநாயகத்தின் காலத்தில் அரைது பாசறையில் பயிற்சி பெற்ற சிவசிதம்பரம் தமிழர்கள் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர். அதனால் சிங்கள அரசு அவரை சிறையில் அடைத்து இன்புற்றது.

''சிம்மக் குரலோன்'' என்று புகழப்பட்ட தலைவர் சிவசிதம்பரம் அறிவாலும், பேச்சாற்றலாலும் தன்னை வளப்படுத்தியிருந்தார்.

ஒருகாலத்தில் இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருந்தவர்களை நோக்கும் போது அவர்களின் குறைந்த தகுதி அட்வகேட் ஆகஇருந்தது. இன்று அப்படியொரு நிலையைத் தேடியும் காணமுடியாது. அந்தளவுக்கு நிலைமை மாறிவிட்டது.


சட்டவல்லுநர்கள்தமிழ் பாராளுமன்றஉறுப்பினர்கள் இருந்த காலத்தில் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் நடுங்கினார்கள். அவர்களைக் கண்டவுடன் எழுந்து வணங்கினார்கள் அத்தகைய ஓர் இடத்தில் இருந்தவர் மறைந்த தலைவர் சிவசிதப்பரம். அவரின் ஆளுமையான உரையும், ஆதாரமானதகவல்களும் பாராளுமன்றத்தையே கலங்கவைத்தது எனினும் சிங்களத் தலைவர்கள் தமிழ் தலைவர்களின் அகிம்சைவழிப் போராட்டங்களை உதாசீனம்செய்தனர். அவர்களின் உரிமைக் குரலை இனவாதமாகக் கருதினர் அதன் காரணமாக போராட்டம் உருவாகியது. போராட்ட சூழலும், அரசியலும் ஒன்றோடு ஒன்று பொருந்த முடியாதவையாக இருந்தபோதுதமிழ் அரசியல் தலைவர்களிடையே விரிசல் நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக தலைவர் சிவசிதம்பரம் இந்தியாவில் தங்கியிருந்தார். விடுதலைப் போராட்டமே தமிழர்களுக்கு விடிவைத் தரும் என்ற உண்மையை தமிழ் அரசியல் தலைவர்கள் உணர்ந்த போது ஒற்றுமைப்பட்டு ஒருகுடையின் கீழ் இயங்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அத்தகையதோர் சூழ்நிலையில் சிவசிதம்பரம் அவர்களின் மறைவு பேரிழப்பாகும். அவரின் அரசியல் அனுபவஞானத்தை நாம்பெறமுடியாமல் போனமைதுரதிஷ்டமே.

# போருக்குப் போகினும் ஈசனை வழிபட்டேகும்

# இலங்கை வேந்தனின் இயல்பு சாலச் சிறந்தது

## வெள்ளி நற்சிந்தனை



பேராசிரியர்
**ரா. பி. சேதுப்பிள்ளை**

அரக்கர் என்பவர் மறப் போர் வீரர். அன்னார் ஒருகால் வானவரொடு புரிந்த பெரும் போரில் தோல்வியுற்றனர். இலங்கையரசும், செல்வமும் இழந்தனர். பாதலம் புகுந்து பதுங்கி வாழ்வாராயினர். தருக்கிழந்த அவ்வரக்கர் குலம் தலையெடுக்கத் தசக்கிரீவன் தோன்றினான். அரக்கர் குலக் கொழுந்தாய் விளங்கியஅவ்வீரன், தன்குலப் பெருமை குன்றிநிற்கக் கண்டு மனம் குழைந்தான். ஆண்மை நிறைந்த அரக்கர் மானமழிந்து, ஏறுபோற் செல்லும் நடையிழந்து, ஏங்கிநிற்க, கின்னரர் தலைவனாகிய குபேரன் விமான மூர்ந்து, இலங்கையை ஆளக் கண்டு, தசக்கிரீவன் மனம் கொதித்தான். ஐம்புலன்களையும் அடக்கியாற்றும் அருந்தவத்தின் வலிமையாலேயே அரக்கர் பெருமை இவ்வுலகில் மீண்டும் நிலைபெறும் என்று அறிந்த அவ்வண்ணல், ஓர் அழகிய 'கொன்றைவனம் குறுகிப்பல்லாண்டு பெருந்தவமியற்றினான். அரக்கர் காளை இயற்றிய தவத்தின் பெருமைஅறிந்த அரன் அவன் முன்னர்த் தோன்றி உயரிய வரங்களை உவந்தளித்தான். அவ்விதமே தசமுகன் தம்பியாய்த் தோன்றிய கும்பகர்ணன், நீரில் மூழ்கியும், நெருப்பில் நின்றும், நெடுந்தவம் புரிந்து, பல வரங்களைப்பெற்றான். அருந்தவமுயன்று பெருவரம் பெற்ற வீரர்களை ஆர்வமுறத் தழுவி அரக்கர் அகம் களித்தார்கள். அரக்கர் குலம் தலையெடுத்தது என்னும் ஆர்ப்பொலி, எங்கும் நிரம்பியது.

**சிவனடியே சிந்திக்கும் செல்வன்**

வரத்திலும் வலிமையிலும் தலைசிறந்த தசக் கிரீவனை எதிர்க்க அஞ்சிக் குபேரன் இலங்கையை விட்டு அகன்றான். அப்போது இழந்த தனம் அடைந்தவர் போல் அரக்கர் தம் பழம் பதியிற் குடிபுகுந்தார்கள். தவப் பெருமை சான்ற தசமுகன இலங்கை மாநகரில் மணிமாடமாளிகைகள் நிடுமித்து, மயன் மகளாகிய மண்டோதரியை மணந்து, மன்னர் மன்னனாக விளங்கினான்.

இவ்வனம் செயற்கரிய தவம் செய்து சிறப்புற்ற தசக்கிரீவன், சிவனடியே சிந்திக்கும் செல்வனாயமைந்தான். சிவபெருமானையே மனமொழி மெய்களால் வழிபடும் மாண்பு வாய்ந்த இலங்கை நாதனது மேனியில் இலங்கிய திருநீற்றின் பெருமையை இராவணன் மேலதுநீறு, எண்ணத் தருவதுநீறு' என்று திருஞான சம்பந்தர் போற்றிப் புகழ்ந்தார். ' மந்திரமாவதுநீறு'வானவர் மேலது நீறு' என்று எடுத்துத் திருநீற்றின் பெருமை கூறப் போந்த திருஞானசம்பந்தர், இராவணனின் மேனியில் இலங்கும் வெண்ணீறு என்று ஏத்துவாராயின், அந்நீற்றினையணிந்த இலங்கேசன் பெருமை அளவிடத் கெளிதே? முழுநீறு பூசிய முனிவரேபோல் இலங்கை வேந்தன், திண்ணிய மேனியில்திருவெண்ணீறணிந்துமாதொருபாகனை மனக்கோயிலில் அமைத்து மகிழ்ந்தான். தேவருக்கும் மற்றுமுள்ள யாவருக்கும் மூலாய முழுமுதற் பொருளை அருமறையாற் போற்றி வழிபடும் அறிஞனாய் விளங்கினான். பண்ணொன்ற இசை பாடும் அடியார்க்கு மண்ணும் விண்ணும் கொடுக்கும் மணிகண்டன் பெருமையை வீணையிலமைத்து விண்ணோடும் வியக்கப்பாடினான். இம்மன்னன் மனைவியாயமைந்த மண்டோதரி'கற்பின் செல்வியாய், கலைஞானமும், சிவஞானமும் பெற்று விளங்கினாள். இவ்வனம் மனமொத்த மனையாளொடு சைவசமய சீலனாய் இலங்கைவேந்தன் இல்லறம் நிகழ்த்தினான்.

**இராவணன் பெயர்**

இவ்வேந்தனுக்கு இராவணன் என்னும் பெயர் இறைவனாலேயே அருளப்பெற்றதென்பர். ஈசன் வீற்றிருந்தருளும் வெள்ளிமாமலையை அசைத்த இலங்கை மன்னன், அம்மலையின் கீழகப்பட்டு நெரிந்த நிலையில் அலறி அழுது அறியாதுசெய்த பிழை பொறுத்தருளுமாறு பணிந்து பன்னருஞ்சாமகீதம் பரிவுடன் பாடலுற்றான். மனங்குழைந்தழுத இலங்கை நாதனுக்கு, இன்னருள் சுரந்து, ஈசன் இராவணன் என்னும் பெயரும், நெடிய நாளும், கொடிய வாளும் அருளினான் என்பர்,

இப் பெயரின் வரலாற்றைக் கம்பரது கவிதையிலே காணலாம். நன்றி மறவாத கும்பகர்ணன் அமர்க்களத்தில் ஆவி துறந்தான் என்றறிந்த நிலையில், ''அளவிளந்த சோகத்தால் அழுதரற்றிய அரற்றிய அரக்கர்கோமான்'' அண்டத்தளவும் இணைய பகர்ந்தழைத்துப் பண்டைத்தன் நாமத்தின் காரணத்தைப் பார்த்தான்'' என்று கவிஞர் கூறும் மொழிகளில் இராவணன் என்ற சொல்லின் பொருள் இனிது விளங்கக் காணலாம்.

இறைவனளித்த இணையற்ற வாளின் வலிமையால் மூவுலகையும் வென்று முட்டின்றி முறை செய்தல், இலங்கை வேந்தனுக்கு எளிதாயிற்று, கால தூதர் போன்ற காலகேயர் தலைகளை, அவ்வாளின் வன்மையால் இராவணன் அறுத்தெறிந்த கால முதல், அவன் பெயரைக் கேட்ட அளவில், கருவிலமைந்த மகவும் கலங்குவதாயிற்று, இன்னும், தன் கொடிய வேற்படையால மாளாத கழுகின் வேந்தனை ஈசனருளிய இலங்குவாளாலேயே இராவணன் ஈர்ந்து கொன்றான்.

**தேவாரப் பாமாலை**

இத்தகைய வீரம் வாய்ந்த இலங்கை வேந்தன் சிவபிரானையே முழுமுதற் கடவுளாகக் கொண்ட வாலியாரின் உயிர் நண்பனாக அமைந்தான். வலிமை சான்ற வீரர் இருவரும், வழிபாட்டிலும் ஒற்றுமையுடையராக இருந்தமையால், தெய்வ மணக்கும் தேவாரப் பாமாலையில் இலங்கும் பேறு பெற்றனர். இலங்கை வேந்தன் ஈசன் அருள் பெற்ற உண்மையைச் சிவஞானச் செல்வராஜ திருஞான சம்பந்தரும், சொல்லின் செல்வராஜ திருநாவுக்கரசரும், பதிகந் தொறும் அமைத்துப் பாராட்டுவாராயினர். இவ்வாறு தெய்வத் திருமுறையில் ஆன்றோர் இருவரும் பாடியதன் கருத்தினை,

''மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையில்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் எனக் காட்ட, எண்ணமில்லா வல்லரக்கன் எடுத்து
முறிந்திசைபாட அண்ணலவற் கருள் புரிந்த
ஆக்கப் பாடருள் செய்தார்''

என்று சேக்கிழார் இனிதெடுத்துரைத்தனர். இத்தகைய புகழ்மாலை பெற்றுயர்ந்த அரக்கர்கோன், இறுதியாக இராமனுடன் போர்புரியப் போந்தநிலையினும், இறைவனை வழிபட்டுச் சென்ற முறைசாலச் சிறந்ததாகும். உலகெலாம் கலக்கிவென்ற மைந்தனாகிய மேகநாதனை இழந்து மூலபலம் முறிந்து, ஆணிவேரிழந்த மரம்போல் அசைந்து ஆடிய அரக்கர் கோமான்,

''ஈசனை இமையா முக்கண் இறைவனைஇருமைக்கேற்ற பூசனை முறையிற் செய்து
திருமுறை புகன்றதானம் வீசினன் இயற்றி மற்றும் வேட்டன வேட்டோர்க் கெல்லாம், ஆசறநல்கி ஒல்காப் போர்த் தொழிற்கமை வதானான்'' என்றுகம்பர் அருளிய கவியில் அவ்வழிபாட்டின் திறம்இனிதுஇலங்குவதாகும், இருப்பதோ அன்றி இறப்பதோ என்ற நிலை எய்திய போதும், இருமையும் தரும் பெருமானாகிய ஈசனைமுறை வழுவாது வழிபட்டுச்சென்ற மன்னவன் சீலம், அரனடியார் மனத்தைக் கவர்வதாகும்.

## தினசரி தியானம்

### கடமை

கர்மண்யே வாதிகாரஸ்தே மாபலேஷுகதாசன.

- பகவத்கீதை

செய்கருமத்தேயன்றிச் சேரும் பயன்தன்னில்
ஐயவுனக்கில்லை அதிகாரம்.

- பகவத்கீதை வெண்பா

கருத்துடன் என் கடமையைச் செய்வதே உன் வழிபாடு என்பதை இறைவா, நான் கற்றுக் கொள்வேனாக.

கடமையைச் செய்வதே கடவுள் வழிபாடு. ஆகையால் அதில் மேலானது, கீழானது என்பதில்லை. சுயநலம் படைத்தவனே கடமையைத் தொல்லையென்று கருதுகிறான், சலிப்பும், சஞ்சலமும் சுயநலத்திலின்று வருகின்றன. ஆகையால் கடமையைக் கருத்துடன் செய்யாதவன் ஒழுக்கம் தவறியவனே. தொடர்ந்து மகிழ்வுடன் தன் கடமையைச் செய்பவன் கடவுளுக்கு உகந்த கருவியாகிறான்.

- ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

## சிவசிதம்பரம்

இரா. சம்பந்தன் உட்படஅவரின் மனைவி திருமதிசிவசிதம்பரம் பிள்ளைகள் மற்றும் உறவினர்களும் வரவுள்ளனர்

வவுனியா நகரசபைமண்டபத்தில் இடம்பெறவுள்ளஅஞ்சலிநிகழ்வில் வன்னிமாவட்ட எம்.பி சிவ சக்திஆனந்தன் கே.ஆர்.குகனேஸ்வரன், விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ரி.மேலவன் வவுனியாமாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களானஎஸ்.சுப்பிரமணியம், குலதேவராஜா ஆகியோர்உரையாற்றவுள்ளனர்

இன்றுமாலை பூதவுடல் யாழ்ப்பாணம் வந்துசேரும்.

இதேவேளை விமானம் மூலமாக பூதவுடல் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படுவதாக முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும்வவுனியாவில் அஞ்சலிக்காக வைக்கும்நோக்குடன் ஏ-9 தரைவழிப்பாதை யூடாக பூதவுடலை எடுத்துவருவதெனமுடிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## அரசியலமைப்பு சபை இன்று மீண்டும் கூடுகிறது

(கொழும்பு)

அரசியலமைப்புச்சபை மீண்டும் இன்று கூடவுள்ளது.


மேற்படி அரசியலமைப்புச் சபைக்குச் சிறந்த உறுப்பினர்கள்தெரிவு செய்யப்பட்டிருக்கப்கின்றனர் என்றும்,

பேரவையின் முன்னேற்றங்கள் குறித்து சபைக்கு அவ்வப்போது அறிவிக்கப்படும் என்றும் பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார். (உ)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

தாயின் மடியில் | மண்ணின் மடியில

1928 - 05 - 29



2002 - 05 - 09

அமரர்

## வ.வ.இ. நடனசிகாமணி

(மணியண்ணா) வல்வெட்டித்துறை

(உரிமையாளர் கொரனேசன் ஸ்ரோர்ஸ், நியூசிட்டி ஜீவலர்ஸ் திருகோணமலை)

[முன்னாள் தலைவர் வல்வை முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்]

அன்பின் திருவுருவமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
வாழ்ந்த எங்கள் அன்பு ஐயாவே
அன்பின் சிகரமாய், பண்பாய் எம்மை வளர்த்து
இன்று பாதியில் தவிக்கவிட்டு
கப்டன் அலன் மற்றும் தம் பாரியார் உடன் சென்றீரோ
மண்ணோடு கலந்தாலும் உங்கள் அன்பை விட்டு சென்றீரோ
பிள்ளைகள் பேரப்பிள்ளைகளை விட்டு நீங்கள் வெகுதூரம் சென்றீரோ
உங்கள் உடன் பிறப்புக்களையும் விட்டு சென்றீரோ
நாம் இங்கு கலங்கி நிற்கிறோம

ஓம் சாந்தி

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவுத் துயர் கேட்டு எம்முடன் தொலைபேசியிலும், நேரிலும் வந்து எமக்கு ஆறுதல் கூறி இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாளை (08.06.2002) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை

அன்புத் தெய்வத்தின் அரவணைப்பில் வாழும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(5390)



வடமராட்சியில் நடந்த மாணவர் எழுச்சிக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

படம்-திருநீபன்

### எக்ஸ்போ விமான...

ஆயத்தங்களுடன் சிங்கள மகாவித் தியாலயத்திற்கு வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வழமையாக இடம்பெறும் இன்றைய விமான சேவையில் பயணம் செய்வதற்கு பயணச்சீட்டுக்களைப் பெற் றவர்கள் காலை 7 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் சிங்கள மகா வித் தியாலயத்திற்கு வருகை தருமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (உ-3)

### கமறூனிடம் சவுதி தோல்வி

நேற்றைய உலகக் கிண்ண கால்ப ந்தாட்டப் போட்டியில் கமறூன் அணி சவுதி அரேபிய அணியை 1-0 என்ற கோல் கண க்கில் தோற்கடித்தது.

உலககிண்ண ஆட்டத்தில் முதற் சுற்றில் சவுதி ஆரேபிய அணி ஜேர் மனியிடம் தோல்விகண்டிருந்தது.

இந் நிலையில் இப் போட்டியில் இறு திச் சுற்றிற்கு தகுதி பெறாது வெளி யேறும் முதல் அணி சவுதி ஆகும்.


மில்க்வைற்




25 மொடேன் மில்க்வைற் மேலுறைகளை வாடிக்கை கடைகளில் கொடுத்து ஒரு கொம்பாஸ் பெட்டியை பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப் இண்டஸ்ரியல்ஸ
327, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541



சண்சயின்




லாலாவின் தயாரிப்பு
மாணவர்களே! இதோ இந்த உருவத்தையும் பாருங்கள்.
லாலா அச்சுவேலி



சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான
நல்லெண்ணெய்

V.S.P. லஞ் ஒயில்

தயாரிப்பாளர்:
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(C/4243)


யாழ்.
ஹற்றன் நஷனல் வங்கியின்
ஆதரவுடன்
யாழ். இந்துக்கல்லூரி
சதுரங்கக்கழகம்
நடத்தும்
பாடசாலை தனிநபர், அணிகளுக்கிடையிலான
வருடாந்த(9ஆவது)

## சதுரங்கச் (CHESS) சுற்றுப்போட்டி - 2002

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் 16வயதுக்கு மேற்பட்ட, 16 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் அணி, பெண்கள் அணி என்பனவற்றிற்கு 6வீரர்களையும் 1பதில் வீரரையும் கொண்ட விண்ணப்பத்தினையும் 14வயதுக்குட்பட்ட, 12வயதுக்குட்பட்ட ஆண்கள், பெண்கள் தனிநபர் போட்டிக்கு ஒரு பாடசாலையிலிருந்து ஒவ்வொரு பிரிவிற்கும் ஐந்து வீரர்களுக்கு மேற்படாத விண்ணப்பத்தினையும் தங்கள் பாடசாலை அதிபர் ஊடாக,

அதிபர்
யாழ். இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

எனும் விலாசத்திற்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ 2002-06-19 புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:

1) முதலாம் சுற்று அணித்தெரிவும் போட்டி ஒழுங்குகளும் 2002-06-19 புதன் பி.ப 3.00மணிக்கு யாழ். இந்து குமாரசுவாமி மண்டபத்தில் ஆரம்பமாகும். சகல ஆவணங்களுடனும் பொறுப்பாசிரியர், அணித்தலைவர் ஆகிய இருவர் மட்டும் பங்குபற்றினால் போதுமானது.
2) 2002.06.22சனி, 2002.06.24 திங்கள் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப. 5.00மணிவரை யாழ்.இந்து குமாரசுவாமி மண்டபத்தில் போட்டிகள் நடைபெறும்.
3) சதுரங்கப் பலகைகளையும், மதிய உணவுப் பார்சல்களையும் கொண்டு வரவும்.
4) 2002.07.13 சனி மு.ப. 9.00மணிக்கு யாழ்.இந்து குமாராசுவாமி மண்டபத்தில் பரிசளிப்பு விழா கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெறும்.
5) 2002.12.31இல் வயது எல்லைகள் கணிக்கப்படும்.
6) எல்லாப் போட்டிகளும் ஒரே நேரத்தில் நடைபெறுவதால் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் பங்குபற்ற முடியாது.
7) முடிவுத் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
8) ஒரு பாடசாலையிலிருந்து ஒரு பிரிவுக்கு ஓர் அணி மட்டும் பங்குபற்றலாம்.
9) மேலதிக விபரங்களுக்கு யாழ். இந்துக்கல்லூரி சதுரங்கக் கழகத்துடன் அல்லது யாழ்.ஹற்றன் நஷனல் வங்கியுடன் தொடர்புகொள்ளவும்.

யாழ். ஹற்றன் நஷனல் வங்கி,
யாழ்ப்பாணம்.

அதிபர்,
யாழ்.இந்துக்கல்லூரி.



## மூத்த தலைவர் சிவசிதம்பரத்துக்கு எமது அஞ்சலி

முன்னாள் உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உப சபாநாயகரும், இன்றைய யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கட்டைவேலி ப.நோ.கூ. சங்கங்களின் சமாசத்தைப் புனரமைப்புச் செய்து நிலைபெறச் செய்தவரும், மக்களால் உடுப்பிட்டிச் சிங்கம் சிம்மக்குரலோன் எனப் புகழப்பட்டவருமான எமது மண்ணின் மூத்த தலைவர் அமரர் மு.சிவசிதம்பரம் அவர்களுக்கு எமது உளம் நெகிழ்ந்த அஞ்சலிகள்

பணிப்பாளர், பணியாளர்கள்,
கட்டைவேலி-நெல்லியடி,
ப.நோ.கூ. சங்கம், கரவெட்டி

(C/4342)

## 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் - 1922 - 10 - 02



மறைவு - 2002 - 05 - 08

திதி-07.06.2002

### திருமதி கதிரவேலு சின்னம்மா

(கோண்டாவில்)

ஓடோடி வந்தும் உம்முகத்தைக்
காணாத பாவி ஆனோம் அம்மா
உம்முகத்தை எப்போது காண்போம் அம்மா
காலம் எல்லாம் உம் நினைவோடு
கலங்குகின்றோம் அம்மா
நின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் தவிக்கும்
மகேந்திரன் குடும்பம்(மகன்)
(கட்டப்பிராய்)

(C/4343)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.06.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.